**திருகோணமலை நகர சபை**

**திருகோணமலை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 நவம்பர் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 மார்ச் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

-----------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திருகோணமலை நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

------------------------------------------------------------------------------------------------------------------------

உள்ளுராட்சி மாகாணசபைகள் அமைச்சின் 2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீஏ/SLPSAS ஆம் இலக்க சுற்றறிகையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------------------

கணக்குகள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகக் கிடைத்த ஆறு வாகனங்களின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிருப்பிலுள்ள ஆயுர்வேத மருந்து இருப்பின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் ஊழியர் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,150,382 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அறுவைக்கூட நிலுவை வாடகை ரூபா 143,349 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கு வழங்கப்பட்ட நீருக்காக 1991 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்படைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,645,367 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பதவியணியினர் கடன் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடுவதற்கிருந்த பதவியணியினர் கடனின் அளவு ரூபா 15,893,361 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 15,222,733 ஆக கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் பதவியணியினர் கடன் மீதி ரூபா 670,628 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 1,495,345 தொகை மற்றும் இறுதிப்பட்டியலுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 668,257 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நான்கு கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 94,791,767 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 78,881,410 என கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 15,910,357 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம், செலுத்த வேண்டிய இரண்டு கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,965,613 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 49,155,732 என கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் செலுத்த வேண்டிய கணக்கு மீதி ரூபா 25,190,119 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்கு

தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொங்கல் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 30,153,029 தொகையான செலவு மீதி 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய கணக்காக காண்பிக்கப்படுகின்ற ரூபா 161,644 கூட்டுமொத்தத் தொகையையும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கணக்காகக் காண்பிக்கப்படுகின்ற ரூபா 4,557,338 கூட்டுமொத்தத் தொகையையும் தீர்த்து வைப்பதற்போ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | தொகை | வழங்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 76,392,129 | மீதி உறுதிப்படுத்துதல், காலப்பகுபாய்வு மற்றும் விரிவான பட்டோலை |
| பயன்பாட்டுச் சேவைக்கான கடன் | 5,010,261 | |
| பதவியணியினர் கடன் | 15,222,733 | |
| அறவிடவேண்டிய பயன்பாட்டுச் சேவைகள் | 110,137 | |
| வருமானக் கடன்பட்டோர் | 90,357,650 | |
| முற்கொடுப்பனவுகள் | 2,768,536 | |
| கடன்கொடுத்தோர் | 1,751,117 | |
| முற்பெறுவனவுகள் | 4,533,938 | |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 73,598,712 | |

## 13.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) கிழக்கு மாகாண சபையின் நிதிப்பிரமாணம் | |
| பீ.எப்.ஆர் 104 - | நிதி நிர்வாகத்தை இலகுபடுத்தவதற்காக பணிக்கையளித்தல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 05 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | உள்ளகக் கணக்காய்வு அலகொன்றைத் தாபிப்பதற்காக கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,837,240 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,441,990 ஆகும்.

### 2.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 55,000 | 31,441 | 69,090 |
| வாடகை | 23,420 | 19,997 | 11,855 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 215,510 | 94,710 | 9,134 |

### 2.3.2 நிலுவை வாடகை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் வாழ்ந்து வரும் 33 உத்தியோகத்தர்களினால் பல வருடக் கணக்காக வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 256,928 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. எனினும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சில கடை உரிமையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 11,854,420 ஆக இருந்தது. எனினும் ஐந்து வருட காலத்திற்கு மேற்பட்டதாக அந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சபைக்குரிய காந்தி நகரில் அமைந்துள்ள காணியொன்றில் 288 நபர்களினால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்திருந்தனர். எவ்வாறாயினும் உரிய அதிகாரத் தரப்பினரின் அங்கீகாரம் பெறப்படாது சபையினால் அனுமதியற்ற வகையில் காணியை பிடித்து வைத்திருந்த நபர்களுக்கு 2008 ஆண்டின்போது உறுதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாக நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் கணிப்பிடு செய்யும்போது ஊழியர்களின் மொத்த சம்பளம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், நூற்றியிரண்டு அமைய ஊழியர்களின் ஊிழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது சபையினால் அடிப்படைச் சம்பளம் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக கணிப்பிடப்பட்டு அனுப்பப்பட்ட பங்களிப்புப் பணத்திற்கும் செலுத்தவேண்டிய பங்களிப்புப் பணத்திற்கும் இடையே ரூபா 1,525,665 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) பொருள் மெய்மையாய்வச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசகளை அமுல்படுத்துதல்

---

i. 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வுச் சபையினால் 589 பொருள் விடயங்களை விற்பனை செய்வதற்கும் 51 பொருள் விடயங்களை அகற்றுவதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சிபாரிசுகள் இது வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வின் போது 111 களஞ்சிய விடயங்கள் மற்றும் 4293 நூலகப் புத்தகங்கள் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

2013 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் போதும் ரூபா 16 மில்லியன் முதல் ரூபா 47 மில்லியனிற்கு இடையேயான வீச்சில் வங்கி மீதியொன்று வட்டி உழைக்கும் வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்படாமல் நடைமுறை வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குரிய 25 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால வீச்சில் விளைவற்று சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 946,964 கிரயத்தில் 1999 ஆம் ஆண்டின் போது அமைக்கப்பட்ட முதியோர் இல்லமொன்று எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------

பங்களிப்புப் பணம் உரிய காலத்தில் அனுப்பப்படாமையின் காரணமாக ரூபா 1,477 தொகையான மிகைக் கட்டணமொன்று ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

-------------------------------

**3.4.1 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

------------------------------------------------------

சபையினால் கழிவுப் பொருட்களை அகற்றும் உபகரணங்களை பயன்பத்துவதற்குரிய ஒப்பந்தமொன்று ரூபா 3,202,125 ஒப்பந்தப் பெறுமதியில் 2012 சனவரி 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உரிய அதிகாரத் தரப்பனரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கில் கழிவுப்பொருட்களை அகற்றும் இயந்திர உபகரணங்கள் நிர்மாணங்களுக்குரிய மொத்த ஒப்பந்தச் செயற்பாடுகளும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக கொள்வனவு செய்யும் நிறுவனத்தினால் ஒப்பந்த மதிப்பீட்டுப் பெறுமதியில் 5 சதவீதத்திற்குக் குறையாத செயலாற்றல் பிணைமுறியொன்று பெறப்பட வேண்டும். எனினும் சபை செயலாற்றல் பிணையொன்றைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. அதனால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்புப் பிணைமுறியொன்று பெறப்படாது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,000,000 தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,850,150 தொகையான பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றதன் பின்னர் ஒப்பந்தக்காரினால் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. எனினும் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை மீள அறவிடுவதற்காக சபையினால் ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 யானை மின் வேலி அமைத்தல்

2014 யூன் 20 ஆந் திகதி சபையினால் கழிவுப் பொருள் அகற்றும் நிலத்தை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த நிலத்தைச் சுற்றி மின்சார வேலியை அமைப்பதற்காக ரூபா 893,060 பெறுமதியான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்தக்காரரினால் பின்வரும் வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் அந்த விடயங்கள் திருப்திகரமானதாக பூர்த்திசெய்யப்பட்டதாக உறுதிப்படுத்தி அந்த பூர்த்தி செய்யப்படாத வேலைக்காக ரூபா 197,700 கூட்டுமொத்தம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

| **வேலை விடயம்** | **அலகுகளின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை** |
|---|---|---|
| | | **ரூபா** |
| 90 அம்பியர் சோல அம்பியர் | 02 | 110,000 |
| மின்னல் தாங்கி | 02 | 22,000 |
| கொழுடுக்கியுடன் கல்வனைஸ் மேவுகை | 03 | 5,700 |
| மின் பரீட்சிப்பு உபகரணம் | 03 | 60,000 |
| | | 197,700 |

(ஆ) மாதிரிகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் கி.வோ.75 இயளவையுடைய சூரிய சக்தி வழங்கல் பொருத்தப்பட வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரரால் கி.வோ.1 இயலளவையுடைய சூரிய சக்தி வழங்கல் பொருத்தப்பட்டிருந்த போதிலும் மாதிரிகளில் குறிப்பிடப்பட்டதன் படி ரூபா 160,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சூரிய சக்தி வழங்கல் உரிய மாதிரியில் வைக்கப்படாது தற்காலிக கூடாரமொன்றின் கூரையில் வைக்கப்பட்டிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) மாதிரிகள் மற்றும் திட்டமிடல்களின் பிரகாரம் வேலியை நிர்மாணிப்பதற்காக அமைக்கப்பட்ட இரண்டு மரத்தூண்களுக்கிடையே இடைவெளி 4 மீற்றராக இருக்க வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரினால் 33 மீற்றர் தூரத்திலான இடைவெளியில் மரத்தூண் நட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மூன்று வரிசை வயர்களும் (Three Phase Wire) ஒன்றுக்கொன்று பிணைந்து காணப்பட்டது.

(ஈ) மின்சார வேலிக்கு மின்சாரம் வழங்கப்படாமையின் காரணமாக ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்பட்ட மரத்தூண்களில் அனேகமானவை அவற்றை அமைத்த தினம் முதல் காட்டு யானைகளினால் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4.3 கூட்டுப்பசளை உற்பத்தி செய்தல்

திருகோணமலை நகரசபை மற்றும் பிரதேசசபை, நகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் சேகரிக்கப்படுகின்ற கழிவப்பொருட்களின் அளவு வருடமொன்றிற்கு அண்ணளவாக 19,350 மெட்ரிக் தொன் நிறையாக இருந்ததுடன் அவற்றை கன்னியாவில் அமைந்துள்ள கழிவுகளை அகற்றும் இடத்தில் குவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த பொருட்களை தயாரிப்பதற்காக நகர சபையினால் 2015 மார்ச் 17 கணக்காய்வுத் திகதி வரையிலும் எவ்வித வேலைத் திட்டமும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியனர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 | - |
| இரண்டாம் நிலை | 70 | 55 | 15 | - |
| சிற்றூழியர் | 171 | 159 | 12 | - |
| ஏனையவை (அமைய/தற்காலிகம்) | - | 88 | - | 88 |
| மொத்தம் | 244 | 303 | 29 | 88 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் போன்ற பிரதான பதவிகள் முறையே 1996 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அந்தப் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிக்காமல் செயலாளர் பதவியும் கணக்காளர் பதவியும் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் நிறை வேற்றப்பட்டிருந்தன.

(ஆ) சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், விண்ணம்பு, பொது சகாதார பரிசோதகர், மொழிபெயர்ப்பாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகப் பொறுப்பாளர், வருமானப் பரிசோதகர், சந்தை மேற்பார்வையாளர், மோட்டார் தொழில்நுட்பவியலாளர் மற்றும் சாரதி போன்ற பதவிகளின் வெற்றிடம் 2015 மார்ச் 15 கணக்காய்வுத் திகதி வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(உ) இருப்புக் கட்டுப்பாடு

(ஊ) மனிதவள முகாமைத்துவம்

(எ) ஒப்பந்த நிர்வாகம்